بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 4:2, துல்கஃதா, 1428, பக்கங்கள்=12+12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email : suvanam@gmail.com, www.suvanam.com

# ஹஜ் சிறப்பிதழ்

## கஃபாவின் சிறப்புகள்

*- தொகுப்பு: அபூ ஆஸியா*

அகில உலகங்களையும் படைத்த அல்லாஹ் ஒருவன் மட்டும் தான் கடவுள் என்பதற்கு பல அத்தாட்சிகளை ஆக்கினான். அவை இன்றளவும் அல்லாஹ் மட்டும் தான் ஒரே கடவுள் என்பதற்கு ஆதாரமாகத் திகழ்கின்றன. அப்படிப்பட்ட அத்தாட்சிகளில் உள்ளவைதான் அவனுடைய புனிதமிக்க ஆலயமாகிய கஃபாவும் அது அமைந்துள்ள மக்கா மாநகரமும் ஆகும்.

உலக முஸ்லிம்களுக்கு நேர்வழி காட்டுமிடமாகவும், ஒருமைப்பாட்டைப் பறைசாற்றக் கூடியதாகவும் இவ்வத்தாட்சிகள் அமைந்துள்ளன. 'கஃபா' ஆலயத்திற்கும், மக்கா மாநகரத்திற்கும் மற்ற ஆலயங்களை விடவும், நகரங்களை விடவும் தனிச்சிறப்புகளும், சட்டங்களும் உள்ளன. அப்படிப்பட்ட சிறப்புகளில் சிலவற்றைக் காண்போம். உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் ஒரே கிப்லா 'கஃபா' ஆலயம் தான் உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் தொழுகையின் போது முன்னோக்கும் திசையாக அமைந்துள்ளது. இது உலக முஸ்லிம்களின் ஒருமைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. ஒரு முஸ்லிம் எங்கிருந்தாலும் அவர் தொழுகையின் போது கஃபாவை முன்னோக்க வேண்டும்.

*அல்லாஹ் கூறுகிறான்:*

*நீர் எங்கிருந்து புறப்பட்டாலும் உமது முகத்தை மஸ்ஜிதுல் ஹராம் திசையில் திருப்புவீராக! அவர்களில் அநீதி இழைத்தோரைத் தவிர (மற்ற) மக்களுக்கு உங்களிடம் எந்தச் சான்றும் எதிராக இல்லாதிருக்கும் பொருட்டு, நீங்களும் எங்கிருந்த போதிலும் அதன் பக்கமே உங்களுடைய முகங்களை திருப்பிக் கொள்ளுங்கள். ஆகவே அவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். மேலும் எனக்கே நீங்கள் பயப்படுங்கள். என்னுடைய அருட்கொடையை நான் உங்கள் மீது பூரணமாக்கி வைப்பதற்காகவும், நீங்கள் நேர்வழி பெறுவதற்காகவும். (அல்குர்ஆன் 2:150).*

*தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க ...*

### உள்ளே!

திருடர்கள் ஜாக்கிரதை - 3
இறை நினைவுகள் - 5
செல்போனின் தரத்தை அறிவதெப்படி? - 8
லப் டப் (தொடர்) - 9
அல்லாஹ்வின் அற்புத படைப்புகள் - 10
அறிவுப் போட்டி - 12

## உலக பொருளாதாரம்

- அப்துல் மஜீது – ஜித்தா

*(சுவனப்பாதை நடத்திய மாபெரும் எழுத்துலகப் புரட்சிப் போட்டியில் ஒன்பதாவது ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை)*

மனிதர்களின் பெரும்பாலான நேரத்தைப் பொருளாதாரச் சிந்தனைகளும், செயல்களும் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கின்றன. பொருளை சம்பாதிப்பது, செலவிடுவது, சேமிப்பது, வாரிசுகளுக்கு விட்டுச் செல்வது போன்ற சிந்தனைகளில் மனிதன் மூழ்கிக் கிடப்பதை காண முடிகின்றது.

உலகளாவிய அளவில் வறுமை, வேலையின்மை, பஞ்சம், பற்றாக்குறை, ஏற்றத்தாழ்வு போன்றவற்றினால் பல நாடுகள் துயருற்றிருக்கின்றன. மனிதர்களை பெருமளவில் கொல்லுகின்ற ஆயுதங்கள் உற்பத்தி, போதைப்பொருள் உற்பத்தி, ஒழுக்கக்கேடான செயல்கள், அடக்குமுறை போன்ற பல காரணங்களினால் மனித குலத்தை பெரிதும் பாதிக்கின்றன.

### பொருளாதார சிந்தனை

பொருளியல் சிந்தனைகள் மனித வரலாற்றில் அன்று முதல் இன்று வரை வளர்ந்து வந்திருக்கிறது. மனிதன் படைக்கப்பட்டதிலிருந்து பொருளாதார முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றிக்கு ஏற்றவாறு சிந்தனையும் மாறி வந்திருக்கிறது. ஆதிகாலத்து மனிதர்களும் தங்கள் பொருளியல் தேவைகளை நிறைவேற்றியுள்ளனர். விவசாயம் செய்யப்பட்டது, உடைகள் தயாரிக்கப்பட்டன, பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது, செல்வம் சேமிக்கப்பட்டது அத்தகைய சூழ்நிலைகளில் பொருளாதார சிந்தனை மேலும் வளர்ந்து பரிணாமம் அடைந்தது.

### இன்றைய பொருளாதார கோட்பாடுகள்

இன்று ஒவ்வொரு நாடும் வெவ்வேறு பொருளாதார கோட்பாடுகளை பின்பற்றி வருவதை காண்கிறோம். ஒவ்வொரு நாடும் வெவ்வேறான பொருளாதார

கோட்பாடுகளை பின்பற்றும்போது நாடுகளுக்கிடையே வேற்றுமை உருவாகிறது. பிரச்சினைகள் தோன்றுகின்றது.

இன்று உலகில் நிலவுகின்ற எல்லா பொருளியல் கோட்பாடுகளும் ஒரு சில நாட்டின் நன்மைக்காக, சில பிரச்சினைகளை போக்குவதற்காக பொருளியல் சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறிய பிறகு அத்தத்துவங்களும் செயல் இழந்து விட்டன.

மேலும் ஒரு நாட்டிற்கு பயனளித்த பொருளாதார திட்டம் மற்றொரு நாட்டிற்கு தீங்கு அளித்த உதாரணங்கள் ஏராளமாக இருக்கின்றன. உதாரணமாக, இங்கிலாந்து நாட்டிற்கு வாழ்வளித்த ஆடம்ஸ்மித் கோட்பாடுகள் ஜெர்மன் நாட்டிற்கு பேரிழப்பாக அமைந்தது.

### மனிதர்களால் உருவாக்கப்பட்ட உலக பொருளாதாரம்

மனிதர்கள் தாங்கள் வாழ்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப பொருளாதார திட்டத்தை சுய சிந்தனை மூலம் உருவாக்கி வாழ்கின்றபோது நாட்டிற்கு நாடு அது மாறுபடுகின்றது. அதனால் பிரிவு உண்டாகிறது சுயநலம் தோன்றி உலக மக்கள் சண்டையிட்டுக் கொள்ள நேரிடுகிறது. மனித வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

மனிதர்களால் உருவாக்கப்படுகின்ற பொருளாதார திட்டம் எந்த அளவிற்கு உலக மக்களுக்கு வழிகாட்டியாய் இருக்க முடியும் என்பதும் அடுத்த கேள்வி. ஏனெனில் மனிதர்கள் சிந்திக்கும் திறனுக்கு ஓர் எல்லையுண்டு. எதிர்காலத்தில் மாறும் தேவைகளுக்கு ஏற்ப எவராலும் நீண்ட, நிலைத்த பொருளாதார கொள்கையை உருவாக்கிட இயலாது. இதனை கடந்த கால வரலாறு தெளிவாக மெய்பித்து இருக்கிறது.

ஏறத்தாழ 80 ஆண்டுகள் உலகை தனது கைப்பிடியில் வைத்திருந்த கம்யூனிசக் கொள்கை இன்று அழிந்து விட்டது. மேலும் எந்த ஒரு பொருளாதாரக் கொள்கையும் பெரும் மாறுதலுக்கு உள்ளாகாமல் இருந்ததில்லை. இதனால் காலத்திற்கு ஏற்ப பொருளியல் தத்துவங்கள், கொள்கைகள், நடைமுறைகள், நிறைவு பெறாமலேயே இருந்து வருகின்றன. புதுப்புது கொள்கைகள் மனித சமுதாயத்தின் மீது ஒவ்வொரு காலகட்டத்திலும் சோதித்துப் பார்க்கப்படுகின்றன.

உலகின் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் தங்களின் விருப்பத்திற்கு உள்நோக்கத்திற்கு வசதியாக பிற மக்களின் மீது தங்களின் பொருளாதாரத் கருத்துக்களைத் திணித்து வருகின்றனர் என்பதே முற்றிலும் உண்மை. புதிதாக ஒரு கருத்து உருவாகும் போது அது எல்லோருக்கும் நன்மையளிக்கக்கூடியது என்று விளம்பரம் செய்யப்படுகிறது.

மோசமான பாதிப்பு ஏற்படுகின்ற போது அக்கருத்தை உரியவர்கள், நடைமுறை படுத்தியவர்கள் ஒன்று உயிருடன் இருப்பதில்லை அல்லது அவர்கள் அதைப்பற்றி கவலைப்படுவதுமில்லை. பாதிப்புக்கு உள்ளான மனிதர்களுக்கு துன்பம் எவ்வகையிலும் துடைக்கப்படுவது இல்லை. எத்தகைய இழப்பீடும் கொடுக்கப்படுவது இல்லை. அவ்வாறென்றால் யார் மனிதர்களின் பொருளியல் வாழ்க்கைக்குத் தேவையான கோட்பாடுகளை அறிவிக்கக்கூடும் என்ற கேள்வி எழுகின்றது.

எவனால் இவ்வுலகு தோற்றுவிக்கப்பட்டதோ, எவன் இவ்வுலகில் ஓர் இயற்கைத் தன்மையை ஏற்படுத்தி ஒழுங்குபடுத்தியிருக்கின்றானோ எவனின் அறிவுரை உலக மக்கள் அனைவருக்கும் நன்மையளிக்கக் கூடியதாக இருக்குமோ, அவனே தான் பொருளாதார வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியவன் ஆவான். அவ்வகையில் இவ்வுலகைப்படைத்த அந்த ஓர் இறைவன் தான் வழிகாட்டத் தகுதியானவன் அவனது வழிகாட்டுதல் தான் நேரிய வழியாகும் இக்கருத்தை இங்கிலாந்து நாட்டு பொருளியல் நிபுணர் ஆடம்ஸ்மித் தமது நூலில் வலியுறுத்தியிருக்கிறார்.

எனவே, இறைவன் உருவாக்கிய இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாடுகளைப் பற்றி நாம் அறிய வேண்டியது அவசியமாகிறது.

### இஸ்லாமிய பொருளாதாரம்

நாம் வாழும் இவ்வுலகைப் படைத்து, அதில் மனிதர்கள் பிற உயிரினங்கள் வாழ்வதற்கு வசதியை உண்டாக்கிய அல்லாஹ், மனிதர்கள் அமைதியாகவும், செழிப்புடனும் வாழ்வதற்கு தேவையான வாழ்க்கை நெறிமுறைகளையும் பொருளாதாரத் திட்டங்களையும் அவனது திருத்தூதர்(ஸல்) அவர்கள் மூலம் அறிவிக்கின்றான்.

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்

*பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள் நீங்கள் சித்தியடையும் பொருட்டு அடிக்கடி அல்லாஹ்வை நினைவுக் கூறுங்கள். (அல்குர்ஆன் 62:10)*

*(மனிதர்களே!) நிச்சயமாக நாம் உங்களுக்கு பூமியில் சகல வசதிகளையும் அளித்து அதில் உங்களுக்கு வாழ்க்கை வசதிகளையும் ஏற்படுத்தினோம் (இவ்வாறிருந்தும்) நீங்கள் நன்றி செலுத்தவதோ வெகு சொற்பம். (அல்குர்ஆன் 7:10)*

*நீங்கள் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள் (அல்குர்ஆன் 2:188)*

இன்னும் இது போன்ற பல வசனங்களில் பொருளாதாரத்தைப் பற்றி நமது இறைவன் கூறுகிறான்.

### இன்றைய தேவை இஸ்லாமிய பொருளாதாரம்

இஸ்லாமிய பொருளாதாரப் கோட்பாடுகள் கடந்த காலத்தில் பல அரிய சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது. எடுத்துக்காட்டாக வறுமை ஒழிப்புத்திட்டத்தை மேற்கொண்டு ஜகாத் மூலம் ஏழைகளுக்கு முறையாக விநியோகித்து அது வெற்றியும் பெற்றுள்ளது.

வாணிப நெறிமுறைகள் சீரிய முறையில் கையாளப்பட்டுத் தடையில்லா வர்த்தகம் நடைபெற உதவியுள்ளது. வட்டியினை முழுமையாக ஒழித்துப் பொருளாதாரத் துறை தடையில்லாமல் எளிதாகச் செயல்பட ஏற்பாடு செய்தது.

சில சீர்திருத்தச் சட்டங்கள் செம்மையாகவும், இயற்கையாகவும் அமல் செய்ததன் மூலம் விவசாய உற்பத்தி பெருகி விவசாயிகள் தங்கள் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்தது. கடன், கொடுக்கல், வாங்கல் சீர்திருத்தம் செய்யப்பட்டது.

முதன்முதலாக பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்டதன் மூலம் பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்தது. நியாய விலை, நியாயமான கூலி, பொருளாதார நீதி போன்றவை முதன்முதலாகச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டன.

மேற்கூறிய அனைத்திலும் உலக வரலாற்றில் முதன்முதலாகச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது எதுவோ, அதுதான் இஸ்லாமிய பொருளாதார திட்டங்களாகும்.

பல அறிஞர்கள் மாபெரும் ஆராய்ச்சி மூலம் உண்டாக்கிய உலக பொருளாதார திட்டங்கள் ஏற்படுத்திய பேரழிவு மற்றும் துன்பங்கள் ஆகியவற்றை உணர்ந்த பின், மனித குலத்திற்கு ஒரே காலத்தில் நன்மையளிக்கக்கூடிய திட்டங்கள் காணப்பெறாமல் தத்தளித்ததுக் கொண்டிருக்கிற இக்காலத்தில், இஸ்லாமிய பொருளாதாரம் சோதனையாக அளிக்கப்படுகிறது. இதன் செயல்பாட்டினை அறிவுக் கண் கொண்டு வல்லுநர்கள் ஆராயட்டும். மக்களுக்கு நன்மையளிப்பதாக இருந்தால் ஏற்றுக் கொள்ளட்டும். ஆனால் ஆராயும் முன் மனக்கோணல் இல்லாமல் உண்மையை உள்ளபடி தெரிந்து கொள்ளும் நல்ல நோக்கத்துடன் ஆராய்ந்து தெளிவு பெற்றுக் கொள்ளும் படி வேண்டிக் கொள்கிறேன்.

# திருடர்கள் ஜாக்கிரதை!!!

*- ரா. ஹாஜா முகையிதீன் B.Com*

ஹிஜ்ரி 1428, ரமளான் பிறை 23-ல், அஸர் தொழுகையை, வேலை செய்யும் இடத்தில் தொழுதுவிட்டு ஜித்தா, பாப்மக்கா செல்வதற்காக மஹ்ஜர் செனாயியாவிலிருந்து மினி பஸ்ஸில் (கோஸ்டர்) சென்றுக் கொண்டிருந்தேன். செனாயியா செக்கிங் பாயிண்டிற்கும் கிங் அப்துல் அஜிஸ் மருத்துவமனைக்கும் இடைப்பட்ட ஆள்நடமாட்டம் குறைந்த இடத்திலிருந்து பங்களாதேஷை சேர்ந்த ஒரு சகோதரர் 10-15 கிலோ எடை கொண்ட பார்சலுடன் பேருந்தில் ஏறினார். அவர் பதற்றமான சூழ்நிலையில் காணப்பட்டார்.

சிறிது தூரம் செல்லச் செல்ல அவர், தனக்கு ஏற்பட்ட கொடூரத்தை கூற ஆரம்பித்தார் அதாவது தான் NIR என்ற பெயருடைய கெமிக்கல் கம்பெனியில் வேலை செய்வதாகவும், தனக்கு கிடைக்கவேண்டிய சம்பளம், ரமளான் போனஸ், சிறு தொகையை, கம்பெனியிலிருந்து முன்பணமாக (கடன்) பெற்று எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அதோடு பங்களாதேஷில் இருக்கக்கூடிய தன் மனைவி, மக்கள் மற்றும் குடும்பத்தாருக்கு தேவையான பொருட்களை வாங்கி எடுத்துகொண்டு பொருட்கள் அனைத்தையும் கார்கோ மூலமும், ஒன்றுசேர்த்த பணத்தை பேங்க் மூலமும் தன் குடும்பத்தாருக்கு அனுப்புவதற்காக தன்னுடைய இல்லத்திலிருந்து புறப்பட்டு சவூதியா பால் தொழிற்சாலைக்கு (ஹலீப் சவூதியாவிற்கு) அருகில் பஸ்ஸிற்காக காத்து நிற்கும்போதுதான் அவருக்கு ஏற்பட்ட அந்த துயர சம்பவம் நடக்கத் துவங்கியது.

அதாவது தனியார் காரில் மூன்று கயவர்கள் (தொப்பி மற்றும் தாடி சகிதம்) வந்து எங்கே செல்ல வேண்டும் என்று கேட்க பலத் என்று சொல்ல 2 (இரண்டு) ரியால் கொடுத்தால் கொண்டு செல்லுகிறேன் என்று கூறியும் செல்ல மனமில்லாமல் தயங்கி நின்ற சகோதரரை, வலுக்கட்டாயமாக அழைத்து சென்றது அந்தக்கயவர்களின் கூட்டம். அப்படி அழைத்துச் சென்ற அந்த கூட்டம் புறப்பட்ட ஐந்திலிருந்து பத்து நிமிடங்களில் அதாவது ஆளரவமற்ற இடத்தில் தன்னுடைய வழமையாக நடத்தக்கூடிய நாடகத்தை துவங்கி விட்டது.

அதாவது காரில் டிரைவர் தன் இருக்கையிலும், டிரைவருக்கு அருகில் மற்றொருவரும், மூன்றாம் நபர் பின் இருக்கையில் அமர்ந்து இருப்பர். பயணிக்க விரும்புபவர் பின் இருக்கையில் மூன்றாம் நபரின் பக்கத்தில் அமர வேண்டிவரும். சிறிது நேரத்தில் பின்இருக்கையில் இருந்த மூன்றாம் நபர், சவூதி ரியால்கள் கொண்ட பணக்கட்டை பங்களாதேஷ் சகோதரிடம் காண்பித்து இந்த பணம் கீழே கிடந்தது யாரிடமும் சொல்லாதே இதனை நாம் இருவரும் பாதியாக பிரித்துக் கொள்வோம் என்று சொல்லியிருக்கிறான். அதற்கு சகோதரர் எனக்கு வேண்டாம் என சொல்ல சிறிது நேரத்தில் கார் நிறுத்தப்படுகிறது முன் இருக்கையில் இருக்கக்கூடியவன் என்னுடைய பணம் காணவில்லை யார் எடுத்தது முன்பு நான் பின் இருக்கையில்தான் அமர்ந்திருந்தேன் ஆகையால் நீதான் எடுத்திருக்க வேண்டும் என்று கூறி மற்ற இருவரும் சேர்ந்து சகோதரரின் பர்ஸை எடுக்க வைத்து அதிலிருந்த பணம் முழுவதையும் பிடிங்கிகொண்டு வலுக்கட்டாயமாக சகோதரரையும், பொருட்கள் கொண்ட அட்டை பெட்டியையும் கீழே தள்ளிவிட்டு நொடி பொழுதில் சிட்டாக பறந்துவிட்டார்கள்.

பிறகுதான் தெரியவந்தது தனக்கு என்ன நேர்ந்தது, என்னனென்ன பொருள்களை பறிகொடுத்துள்ளோம் என்ற செய்தி. கடைசியாக இக்காமா பறிபோகவில்லை காப்பாற்றப்பட்டுவிட்டது (இக்காமாவையும் பிடுங்க முயற்சித்ததுள்ளார்கள், ஆனால் அல்லாஹ்வின் அருளால் அந்தச் சகோதரர் பாதுகாத்துக் கொண்டார்) கொண்டு வந்த பொருள்களும் கிடைத்துவிட்டது அல்ஹம்துலில்லாஹ் ஆனால், தான் வியர்வை சிந்தி உழைத்துக் கிடைத்த ஏறக்குறைய 4500 ரியால் பறிபோயிள்ளது என ஏங்கினார்.

இந்த கருத்து பரிமாறல்கள் நடந்து கொண்டிருக்கும்பொழுது இடையிடையே அவரின் எண்ண குமுறல்கள், ஆதாங்கம் மற்றும் இயலாமையை நினைத்து வருத்தப்பட்டு புலம்பக்கூடியதை கேட்டு மனது வருத்தப்படாமலில்லை அதாவது வருடமெல்லாம் கஷ்டப்பட்டு சம்பாதித்தப் பணம் ஒரு நொடிப்பொழுதினில் அபகரிக்கப்பட்டுவிட்டதே யாரிடம் சொல்ல வேண்டும், எப்படி சொல்ல வேண்டும், என்ன செய்தால் பணம் திரும்ப கிடைக்கும் என்று அழாக்குறையாக வினவுகிறார். அதற்கு நான் யாரிடமும் சொல்லவும் முடியாது, எதுவும் செய்யவும் முடியாது மனதை தைரியபடுத்திக்

கொள்ளுங்கள் மேலும் இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட்டு பொறுமையாக இருங்கள் அல்லாஹ் இதைவிட சிறந்த ஒன்றை உங்களுக்கு கொடுப்பான் இன்ஷா அல்லாஹ் என்று அந்த சகோதரருக்கு ஆறுதல் கூறினேன்.

கூடுதல் விளக்கத்திற்காக: தனியார் வாகனத்தில் மூன்று பேராக சேர்ந்து வந்து இதுபோன்ற நிகழ்வுகள் செய்வார்கள் என்றல்ல. இந்த கூட்டத்தின் வேறொரு திட்டம் எதுவெனில் வாகனத்தில் டிரைவரைத் தவிர வேறு யாரும் இல்லாத நிலையிலும் உங்களை வாகனத்தில் அழைத்துக் கொண்டு சிறிது தூரத்தில் மற்ற சகாக்கள் வாகனத்தில் ஏறியும் தன்னுடைய நாடகத்தை துவங்குவார்கள் ஆகவே கவனமாக இருக்கவும்.

அன்பு சகோதரர்களே வயிறு பிழைக்க வெளிநாடு வந்த நாம், உழைத்து உண்டாக்கிய பணத்தை அபகரித்துக் கொள்ளவும், பிடுங்கி எடுத்துக் கொள்ளவும் ஒரு சில கூட்டங்கள் பலமான திட்டந்தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன இதுபோன்ற பல நிகழ்வுகள் பல இடங்களில் பற்பல பெயர்களில், பல விதங்களில், கண்கட்டி வித்தைகள் போன்று பலருக்கு அன்றாடம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவைகள் ஒழிக்கப்படவும், அச்சமின்றி வெளியிடங்களுக்கு சென்று வரவும் அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டிருப்பதோடு மட்டுமில்லாமல் இதுபோன்ற விஷயங்களை கேட்கக்கூடிய, பார்க்கக்கூடிய நாம் விழிப்புணர்வோடு செயல்படவும், மற்றவர்களுக்கு விழிப்புணர்வு வழங்குவதும் அவசியம் என்ற காரணத்தினாலேயே இக்கட்டுரையை எழுதியுள்ளேன். அன்றாடம் இதுபோன்ற வழிப்பறி கொள்ளைகளில் பலர் மாட்டிக் கொண்டு அல்லல்படுவதை தடுத்து நிறுத்த மற்ற அனைவருக்கும் இச்செய்தி பற்றிய விழிப்புணர்வை கொடுங்கள்.

இதுபோன்ற நிகழ்வுகள் இன்று தொடங்கியது இல்லை பல ஆண்டுகளாக வழிப்பறி நாடகம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதையும் கவனத்திற்கு கொண்டு வருவதோடு மட்டுமின்றி ஒரு சில உயிர்களும் பறிபோயுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது மஸாத் அல்சார்க் என்ற தொழிற்சாலையில் வேலை செய்த மதுரையை சேர்ந்த ராஜா உசேன் என்ற சகோதரர் கடந்த 2000வது வருடத்தில் மே மாதம் 10ந்தேதி காணாமல் போனவர் இன்றுவரை அவரின் நிலை என்ன என்பது குறித்து எந்த தகவலும் இல்லை என்பதையும் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அறிந்தவகையில் நமது நாடுகளில் கூட்டங்கள் நிறைந்த பஸ்களில், பஸ் நிறுத்தங்களில், இரயில்வே நிலையங்களில் மற்றும் விழாக்கள் நடைபெறுகின்ற பகுதிகளில் பிக்பாக்கெட், வழிமறித்து பிடுங்குதல் இன்னும் இவைகள் போன்ற பாதிப்புகளைத்தான் நாம் அறிந்திருக்கிறோம் ஆனால் இங்கேயோ, மேற்சொன்ன நாடகம் போன்று வேறு பற்பல நாடகங்களை அரங்கேற்றியும் நம் சகோதரர்களின் பொருட்கள் மற்றும் உயிர்களை பறிக்கக்கூடியவர்களின் செயல் திட்டங்கள் ஒரு சிலவற்றையும் எனக்கு தெரிந்த வகையில் கீழே தருகிறேன்.

1. முன்பின் அறிமுகமில்லாதவர்கள் காரில் இருந்தபடியே ஏதாவது பெயரை சொல்லி முகவரி கேட்பது, அதற்கு உதவும் முகமாக நம்முடைய சகோதரர்கள் டிரைவர் இருக்கையினருகில் சென்று சற்று குனித்துக் கொண்டு வழியை சொல்லிக் கொண்டிருக்கும்போது சட்டை மேற்பையில் இருக்கக்கூடிய எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு வாகனத்தில் பறந்துவிடுவது.

2. காரில் இருந்தபடியே ஏதாவது விலாசம் கேட்டு அல்லது போன் நம்பரை சொல்லி இதற்கு ஒரு போன் செய்து எப்படி போக வேண்டும் என்று கேட்டு சொல்லுங்கள் என்று கேட்கக்கூடிய திருடர்களுக்கு நம்முடைய சகோதரர்கள் தன்னுடைய போனிலேயே போன் செய்து அவரிடம் கொடுத்து பேச சொல்வதுதான் தாமதம் அவனின் கைக்கு போன் மாறிய ஒருசில நொடிகளிலேயே கார் பறக்க தொடங்கிவிடும். மொபைல் போனும், அதிலுள்ள பணமும் அம்பேல். இதுபோன்ற நாடகத்தில் பங்கு கொண்ட நம் சகோதரர் ஒருவர் கார் பறக்க தொடங்கியதும் காரை பிடித்து பொருளை மீட்டிவிடலாம் என்று நினைத்து காரை பிடித்து தொங்கி உடம்பில் பல இடங்களில் காயங்களோடு மீண்ட சம்பவங்களும் நடந்துள்ளது.

3. மதிப்பில்லா பொருள்களை இரண்டு பிளாஸ்டிக் பைகளில் தூக்கிக் கொண்டு வந்து, ஒரு பையிலுள்ளவற்றை மற்ற பைக்கு மாற்றுவதற்காக உதவி கேட்டு, நம்முடைய சகோதரர்களும் உதவ முன்வந்து சற்று குனிந்த நிலையில் ஒரு பையை பிடித்திருக்கும்போது தன்னுடைய மேல்பாக்கெட்டிலுள்ள அனைத்தையும் பிடிங்கி கொண்டு மதிப்பில்லா பொருள்களை சகோதரருக்கு விட்டு சென்ற சம்பவங்களும் நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

4. நடைபாதையில் நடந்து கொண்டு தன்னை மறந்த நிலையில் மொபைல் போனில் மற்றவர்களுடன் பேசிக் கொண்டு செல்லக்கூடிய எத்தனையோ நம் சகோதரர்களின் மொபைல் போன் பறிபோயுள்ளது என்பதையும் தெரியபடுத்திக் கொள்கிறேன். இதுபோன்ற செயல்களில் சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் பிரபல்யமாக செயல்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. போன் உங்கள் காதுகளின் பக்கத்திலோ அல்லது கைகளிலோ இருக்கக்கூடிய நிலையில் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்கள் சைக்கிள்களிலோ, நடந்தோ, ஓடிய நிலையிலோ உங்களை கடக்க முற்படுவார்களேயாயின் கவனமாக உங்களின் பொருளை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

5. பேண்ட் பெல்ட்டோடு மொபைல் போன் கவரையும் சேர்த்து வைத்துக் கொண்டு நடக்கக்கூடிய, நின்று கொண்டு இருக்கக்கூடிய நிலையிலும் சைக்கிள்களிலோ, மோட்டார் சைக்கிள்களிலோ அல்லது காரிலோ வந்து போன் கவரோடு மொபைலை பிடிங்கிய சம்பவங்களும் உண்டு.

6. வழியில் நடந்து சென்று கொண்டிருக்கும்போது அறிமுகமில்லாத ஒருவர் 500 ரியால் நோட்டினை காண்பித்து, இந்த பணம் கீழே கிடைத்தது என்னுடையது அல்ல ஆகையால் நாம் இருவரும் சரிபாதியாக எடுத்துக் கொள்வோம் என்று கூறி என்னிடம் சில்லரை இல்லை எனக்கு 250 ரியால் கொடு நான் இந்த 500ஐ உன்னிடம் தந்துவிடுகின்றேன் என்று கூறி 250ரியால்-ஐ வாங்கிக்

கொண்டு 500 ரியாலை கொடுக்காமல் 250 ரியாலோடு பறந்து சென்றவனும் உண்டு அல்லது செல்லா பணமாகிய நகல் (Duplicate) 500 ரியால் பணத்தை கொடுத்துவிட்டு சென்றவனும் உண்டு. பேராசையின் காரணமாக மற்றவரின் பொருளுக்கு ஆசைப்பட்டு தன்னுடைய 250 ரியாலையும் தொலைத்துவிட்டு 500 ரியாலை மாற்ற முடியாமல் திண்டாடியவர்களும் உண்டு.

மேற்சொன்னது மட்டுமல்லாது வேறு பல வழிகளிலும் நம்முடைய பொருள்களை அபகரிக்க முயற்சிகள் நடைபெறலாம் அவற்றிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள ஒரு சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கையாளுவது அவசியம்:

1. வெளியில் செல்லும் போது கூடுமானவரையில் பணம், இக்காமா, மொபைல் போன் மற்றும் இன்னபிற பொருள்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள பழகி கொள்ளவும்.

2. காரில் பயணம் செய்ய நேர்ந்தால் அரசாங்க அனுமதி பெற்ற டாக்ஸிகளில் மாத்திரம் பயணம் செய்யவும். கூடுதல் பாதுகாப்பிற்காக டாக்ஸிகளில் அமருவதற்கு முன்பு டாக்ஸியின் நம்பரை உதாரணமாக 32-40 என்று இருக்கக்கூடிய நம்பரை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். (32 என்ற எண் டாக்ஸி கம்பெனியையும், 40 என்ற எண் அந்த கம்பெனிலுள்ள காரின் வரிசை எண்ணையும் குறிக்கும்)

3. அறிமுகம் இல்லாத தனியார் வாகனத்தில் எப்பொழுதுமே பயணிக்க வேண்டாம்.

4. இரவு நேரங்களில் பயணம் செய்வோர் துணையில்லாமல் பயணிக்க வேண்டாம்.

5. பள்ளிவாசலுக்கோ அல்லது மற்ற இடங்களுக்கோ நடந்து செல்வோர் குறுக்குவழி பாதைகளை தவிர்த்து ஆள்நடமாட்டம் நிறைந்த பெரிய பாதைகள் வழியாக சென்று வரவும்.

6. பொது வாகனங்களில் பயணிக்கும்போது தூங்குவதை தவிர்த்துக் கொள்ளுவதோடு கவனக்குறைவாகவும் இருக்காதீர்கள். உங்களின் கவனக்குறைவை பயன்படுத்தி உங்களின் பொருளை அபகரிக்க முயற்சிகள் நடைபெறலாம்.

இன்னும் பல்வேறுவிதமான புதுப்புது தொழிற்நுட்பங்களுடன் உங்களை அணுக நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம், இதற்கெல்லாம் நமக்கு தெரிந்த ஒரே உபகரணம் நபி(ஸல்) அவர்கள் கற்றுத் தந்த கீழ்கண்ட துஆவை அன்றாடம் அல்லாஹ்விடம் கேட்டுக் கொள்வதுதான்.

யா அல்லாஹ் விதியை பொருத்தத்துடன் ஏற்றுக் கொள்ளும் தன்மையையும், மரணத்திற்குப் பின் குளிர்ந்த (சொர்க்க) வாழ்வையும், வழிகேட்டின் குழப்பத்திலும், தீய விளைவைத்தரும் செயலிலும் ஈடுபட்டுவிடாது உன்னைச் சந்திப்பதின் ஆசையையும் உன் திருமுகத்தைப் பார்ப்பதில் அடையும் இன்பத்தையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன்.

நான் யாருக்கும் அநியாயம் செய்வதிலிருந்தும் அல்லது யாராவது எனக்கு அநியாயம் செய்வதிலிருந்தும் அல்லது நான் அத்துமீறுவதிலிருந்தும் அல்லது யாராவது என்மீது அத்துமீறுவதிலிருந்தும் அல்லது நீ மன்னிக்காத தவறு மற்றும் பாவங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

எல்லாவற்றையும் நன்கு, தீர அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே!

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 8

*மௌலவி இப்ராஹீம் மதனி M.A.*

## தூங்குவதற்கு முன் ஓதவேண்டிய திக்ருகள்

1. சுப்ஹானல்லாஹ் 33 தடவை, அல்ஹம்துலில்லாஹ் 33 தடவை, அல்லாஹு அக்பர் 34 தடவை ஓதவேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் அலி(ரலி), பாத்திமா(ரலி) ஆகியோருக்கு கூறினார்கள்: நீங்கள் இருவரும் உங்கள் விரிப்புக்கு வந்தால், அல்லது படுக்கைக்கு வந்தால் 33 தடவை தக்பீர் (அல்லாஹுஅக்பர்) கூறுங்கள் 33 தடவை தஸ்பீஹ்(ஸுப்ஹானல்லாஹ்) கூறுங்கள், 33 தடவை ஹம்து (அல்ஹம்துலில்லாஹ்) கூறுங்கள்.

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்.

மற்றொரு அறிவிப்பில் 34 தடவை தஸ்பீஹ் (ஸுப்ஹானல்லாஹ்) கூறுங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றொரு அறிவிப்பில் 34 தடவை தக்பீர் (அல்லாஹுஅக்பர்) கூறுங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஆயத்துல் குர்ஸி, இன்னும் சூரத்துல் பகறாவின் கடைசி இரு ஆயத்துக்கள் (285, 286)

3. இரு கையிலும் ஊதிய பின் சூரத்துல் இக்லாஸ், சூரத்துல் ஃபலக், சூரத்துன்னாஸ் இம்மூன்றையும் ஓதி தலையில் இருந்து ஆரம்பித்து முகம் மற்றும் உடம்பில் முடியுமான எல்லா இடங்களிலும் மூன்று முறை தடவுவது.

நபி(ஸல்) அவர்கள் தங்கள் படுக்கைக்கு வந்தால் தங்கள் இருகரங்களிலும் ஊதுவார்கள். முஅவ்விததைன் (குல்அஊது பிரப்பில்பலக், குல்அஊது பிரப்பின்னாஸ் ஆகிய இரண்டு ஸுராக்களையும் அவற்றில்) ஓதி தங்கள் இரு கரங்களையும் தங்கள் உடல் மீது தடவிக் கொள்வார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரி, முஸ்லிம்

புகாரி, முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு நாள் இரவிலும் தங்கள் விரிப்புக்கு வந்தால் தங்கள் இரு கரங்களையும் ஒன்று சேர்த்துப் பின்னர் அவற்றில் ஊதுவார்கள். அப்பொழுது அவற்றில் "குல்ஹுவல்லாஹு அஹது, குல்அஊது பிரப்பில் பலக், குல் அஊது பிரப்பின்னாஸ்" ஆகிய ஸுராக்களை ஓதுவார்கள். பிறகு அவ்விரு கைகளையும் தங்கள் உடலில் இயன்றளவு தடவிக் கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் எனக்கு கூறினார்கள்: நீர் உம் படுக்கைக்கு வந்தால் தொழுகைக்கு உளூச் செய்வது போல் உளூச் செய்து கொள்வீராக! பின்னர் உமது வலது பாகத்தின் மீது ஒருக்கணித்துப் படுப்பீராக! பின்பு (இந்த துஆவை) ஓதுவீராக!

اَللَّهُمَّ أَسْلَمْتُ نَفْسِيْ إِلَيْكَ , وَوَجَّهْتُ وَجْهِيْ إِلَيْكَ , وَفَوَّضْتُ أَمْرِيْ إِلَيْكَ, وَأَلْجَأْتُ ظَهْرِيْ إِلَيْكَ, رَغْبَةً وَرَهْبَةً إِلَيْكَ, لاَ مَلْجَأَ وَلاَ مَنْجَى مِنْكَ إِلاَّ إِلَيْكَ , آمَنْتُ بِكِتَابِكَ الَّذِيْ أَنْزَلْتَ ، وَبِنَبِيِّكَ الَّذِيْ أَرْسَلْتَ (متفق عليه) .

அல்லாஹும்ம அஸ்லம்து நப்ஸீ இலைக், வ வஜ்ஜஹ்து வஜ்ஹீ இலைக, வபவ்வழ்த்து அம்ரீ இலைக, வ அல்ஜஃ்து ளஹ்ரீ இலைக, ரஃ்பதன் வரஹ்பதன் இலைக, லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க இல்லாஇலைக, ஆமன்து பிகிதாபிகல்லதீ அன்ஜல்த வபி நபிய்யிகல்லதீ அர்ஸல்த்'

அறிவிப்பவர்: பராஉ பின் ஆஜிப்(ரலி)
நூல்: புகாரி, முஸ்லிம்

**பொருள்:** யாஅல்லாஹ்! என்னை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். என் முகத்தை உன்பக்கம் முன்னோக்கச் செய்து விட்டேன். என் காரியத்தை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். என் முதுகை உன்பக்கம் ஒதுங்கச் செய்து விட்டேன். உன்னை ஆதரவு வைத்ததற்காகவும் உன்னை பயந்ததற்காவும் (இவ்வாறு செய்தேன்) எந்த ஒதுங்கும் இடமும், தப்பிக்கும் இடமும் உன்னிடமே தவிர வேறில்லை. நீ இறக்கி வைத்த வேதத்தைக் கொண்டும், நீ அனுப்பிவைத்த நபியைக் கொண்டும் நான் ஈமான் கொண்டேன் என்று கூறுவீராக! நீர் அன்றிரவு மரணித்து விட்டால் (தீனுல் இஸ்லாம் எனும்) இயற்கையின் மீது மரணித்து விடுவீர்! இவற்றை நீர் கூறும் கடைசிச் சொற்களாக ஆக்கி கொள்வீராக!

இந்தப் பிரார்த்தனையை கடைசியாக ஓதவேண்டும், இதுவே கடைசி வார்த்தையாகவும் இருக்கவேண்டும், இந்த துஆவை ஓதி அதே இரவில் மரணித்தால் இஸ்லாத்திலேயே மரணித்ததாக பதியப்படும் என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: புகாரி

இன்னும் ஒரு அறிவிப்பில்:

நபி(ஸல்) அவர்கள் தூங்க நாடினால் தங்கள் வலது கையை தங்கள் கன்னத்திற்கு கீழ் வைத்துப்படுப்பார்கள். பின்னர்

اَللَّهُمَّ قِنِيْ عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ

'அல்லாஹும்ம கினீ அதாபக யவ்ம தப்அஸு இபாதக' என்ற துஆவை ஓதுவார்கள்.

பொருள்: யாஅல்லாஹ்! நீ உன் அடியார்களை எழுப்பக்கூடிய நாளில் உன் வேதனையை விட்டும் என்னைப் பாதுகாப்பாயாக!

அறிவிப்பவர்: ஹுதைபா(ரலி), நூல்: திர்மிதி

### தூங்குவதற்கு முன் ஓதும் துஆ

நபி(ஸல்) அவர்கள் தங்கள் விரிப்புக்கு வந்தால்

بِاسْمِكَ اللَّهُمَّ أَمُوْتُ وَأَحْيَا

பிஸ்மிகல்லாஹும்ம அமூது வஅஹ்யா எனக் கூறுவார்கள்.

பொருள்: யா அல்லாஹ்! உன் பெயரைக் கொண்டே தூங்கவும் செய்கின்றேன், விழிக்கவும் செய்கின்றேன்.

அறிவிப்பவர்: ஹுதைபா, அபூதர்(ரலி), நூல்: புகாரி

**வலது கையை வலது கன்னத்துக்குக் கீழ் வைத்துக்கொண்டு வலது பக்கத்தில் சாய்ந்து தூங்க வேண்டும்.**

நீ தூங்குவதற்காக உன் தூங்குமிடத்துக்கு வந்தால் தொழுகைக்கு வுளு செய்வது போல் வுளுசெய்து கொண்டு உன் வலது பக்கத்தில் தூங்கிக்கொள் என்பதாக பராஉ(ரலி) அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

### தூக்கத்தில் கெட்ட கனவுகளை கண்டால்

தான் விரும்பாத வெறுக்கத்தக்க செய்திகளை யாராவது கனவில் கண்டால் இடது பக்கம் துப்புவது போன்று சைக்கினை செய்துவிட்டு ஷெய்த்தானின் தீங்கிலிருந்து அல்லாஹ்விடத்தில் பாதுகாப்பு தேடிக்கொள்ளட்டும்

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

என்று சொல்லவேண்டும். இதனால் அவருக்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாது என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

இன்னுமொரு அறிவிப்பில்: அதை யாரிடமும் சொல்லக்கூடாது என்றும் வந்திருக்கின்றது

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

இன்னுமொரு அறிவிப்பில்: படுத்த பக்கத்தை விட்டுவிட்டு மறு பககம் திரும்பி படுக்கும்படி நபி(ஸல்) அவர்கள கூறினார்கள்.

ஆதாரம்: முஸ்லிம்

### தூக்கத்தில் நல்ல கனவுகளை கண்டால்

உங்களில் ஒருவர் தான் விரும்பக்கூடிய கனவை கண்டால், நிச்சயமாக அது அல்லாஹுவிடத்தில் நின்று உள்ளதென்று (எண்ணிக்கொள்ளட்டும்) அதற்காக அல்லாஹுவை போற்றி புகழ்ந்து, அதை மற்றவர்களுக்கும் சொல்லட்டும்.

இன்னும் ஒரு அறிவிப்பில்: தான் விரும்பியவர்களுக்கு (மாத்திரம்) அறிவிக்கட்டும் என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம் : புகாரி, முஸ்லிம்

### தூங்கி விழித்ததும்.

اَلْحَمْدُ للهِ الَّذِيْ أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا وَ إِلَيْهِ النُّشُوْرُ

**தூக்கத்தில் இருந்து விழித்தபின் மூன்று முறை கையை கழுவிய பின் தான் கையை பாத்திரத்தினுள் நுழைக்க வேண்டும்.**

உங்களில் ஒருவர் தன் தூக்கத்திலிருந்து விழித்தால் மூன்று முறை கையை கழுவும் வரைக்கும் கையை பாத்திரத்தில் நுழைவிக்கக்கூடாது அவரின் கை இரவில் எங்கிருந்தது எதன் மீது இருந்தது என்பது அவருக்கு தெரியாது என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: இப்னு மாஜா

**கஃபாவின் சிறப்புகள்... முதல் பக்கத் தொடர்ச்சி ...**

**முதல் ஆலயம்:**

மக்கள் அல்லாஹ்வை மட்டும் வணங்குவதற்காக முதன் முதலில் கட்டப்பட்ட பள்ளிவாசல் மக்காவிலுள்ள 'கஃபா' ஆலயமாகும்.

*அல்லாஹ் கூறுகிறான்:*

*அகிலத்தின் நேர்வழிக்கு உரியதாகவும், பாக்கியம் பொருந்தியதாகவும் மனிதர்களுக்காக அமைக்கப்பட்ட முதல் ஆலயம் பக்கா(எனும் மக்கா)வில் உள்ளதாகும். (அல்குர்ஆன் 3:96)*

'கஃபா' ஆலயம் தான் முதன் முதலில் கட்டப்பட்ட பள்ளியாகும். அதற்குப் பிறகு, நாற்பது வருடங்கள் கழித்து, பாலஸ்தீனத்தில் உள்ள "மஸ்ஜிதுல் அக்ஸா" கட்டப்பட்டுள்ளது. இதற்குப் பின்வரும் ஹதீஸ் சான்றாக உள்ளது.

அபூதர்(ரலி) அறிவிக்கிறார்கள்: நான் நபி(ஸல்) அவர்களிடம் "பூமியில் முதலில் அமைக்கப்பட்ட பள்ளி எது?" எனக் கேட்டேன். அதற்கு அவர்கள், 'அல் மஸ்ஜிதுல் ஹராம்' (கஃபா) என்று கூறினார்கள். பிறகு எது? என்றேன். 'அல் மஸ்ஜிதுல் அக்ஸா' என்று கூறினார்கள். "இந்த இரண்டிற்கும் மத்தியில் எத்தனை (வருடங்கள் இடைவெளி?)" என்று கேட்டேன். "நாற்பது வருடங்கள்" என்று கூறினார்கள்.

ஆதாரம்: புகாரி

முதன் முதலில் கட்டப்பட்ட 'கஃபா' நாளடைவில் பாழடைந்து செடி, கொடிகள் சூழப்பட்டதாக மாறியது. இஸ்மாயீல்(அலை) அவர்கள் வாலிபப் பருவத்தை அடையும் பொழுது தான் அல்லாஹ் கஃபாவைப் புனர் நிர்மாணம் செய்யுமாறு கட்டளையிடுகிறான்.

*எங்கள் இறைவா! எனது சந்ததிகளை உனது புனித ஆலயத்திற்கருகில், விவசாயத்துக்குத் தகுதி இல்லாத பள்ளத்தாக்கில், இவர்கள் தொழுகையை நிறை வேற்றுவதற்காகக் குடியமர்த்தி விட்டேன். (அல்குர்ஆன் 14:37) என இப்ராஹீம்(அலை) அவர்கள் கூறினார்கள்.*

ஹாஜரா அம்மையாரையும் கைக்குழந்தை இஸ்மாயீலையும் பாலைவனத்தில் விட்டு வரும் போது நபி இப்ராஹீம்(அலை) மேற்கண்ட 'துஆ'வை கூறினார்கள் என்பது ஹதீஸின் (புகாரி) மூலம் தெளிவாகிறது.

எனவே சிதிலமடைந்த பள்ளிவாசலைத் தூய்மை செய்யுமாறும், அதன் அடித்தளத்தை உயர்த்துமாறும் அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

*"தவாஃப் செய்வோருக்காகவும், இஃதிகாஃப் இருப்போருக்காகவும், ருகூவு, ஸஜ்தா செய்வோருக்காகவும் இருவரும் எனது ஆலயத்தைத் தூய்மைப்படுத்துங்கள்!" என்று இப்ராஹீமிடமும், இஸ்மாயீலிடமும் உறுதி மொழி வாங்கினோம். (அல்குர்ஆன் 2:125)*

*அந்த ஆலயத்தின் அடித் தளத்தை இப்ராஹீமும், இஸ்மாயீலும் உயர்த்திய போது "எங்கள் இறைவா! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக் கொள்வாயாக! நீயே செவியுறுபவன் அறிந்தவன்" (என்றனர்.) (அல்குர்ஆன் 2:127)*

**மக்காவிற்குப் பல பெயர்கள் உள்ளன. அவை:**

1. மக்கா, 2. பக்கா, 3. அல்பலதுல் அமீன் (அபயமளிக்கும் நகரம்), 4. உம்முல் குரா (நகரங்களின் தாய்).

நபி(ஸல்) அவர்கள் மக்காவின் மீது அளப்பரிய பற்று வைத்திருந்தார்கள். அங்கேயே வாழ வேண்டும் என எண்ணினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் "ஹஸ்வா" என்ற ஒட்டகத்தின் மீது நின்றவர்களாக மக்காவை நோக்கி, "நீ தான் அல்லாஹ்வுடைய பூமியில் சிறந்த ஊராவாய்! அல்லாஹ்வுடைய பூமியில் மிகவும் விருப்பத்திற்குரிய ஊராவாய்! என்னுடைய சமுதாயம் (உன்னை விட்டும்) என்னை வெளியேற்றி இருக்காவிட்டால் நான் வெளியேறி இருக்க மாட்டேன். (ஆனால், அவர்களோ என்னை வெளியேற்றி விட்டார்கள்)." என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அதீ(ரலி), நூல்: திர்மிதீ

மக்காவை நோக்கி நபி(ஸல்) அவர்கள் கூறிய இச்சொற்கள், அவர்கள் மக்காவின் மீது கொண்டுள்ள அளப்பரிய பற்றை வெளிப்படுத்துகிறது. அபய பூமி மக்கா மாநகரத்தை அல்லாஹ் அபயமளிக்கக் கூடிய பூமியாக ஆக்கியுள்ளான்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

*அபயம் அளிக்கும் புனிதத் தலத்தை அவர்களுக்கு வசிப்பிடமாக நாம் ஆக்க வில்லையா? ஒவ்வொரு கனி வர்க்கமும் நம்மிடமிருந்து உணவாக அதை நோக்கிக் கொண்டு வரப்படுகிறது. எனினும் அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள். (அல்குர்ஆன் 28:57)*

*அதில் நுழைந்தவர் அபயம் பெற்றவராவார். (அல்குர்ஆன் 3:97)*

இப்ராஹீம்(அலை) அவர்களின் 'துஆ'வின் காரணத்தால் அல்லாஹ் மக்காவைப் புனித நகரமாக்கினான்.

நபி(ஸல்) கூறினார்கள்: "இப்ராஹீம்(அலை) மக்காவை புனிதமாக்கினார். அதற்காக பிரார்த்தனை செய்தார். இப்ராஹீம் மக்காவைப் புனிதமாக்கியது போல் நான் மதீனாவைப் புனிதமாக்கி உள்ளேன். நபி இப்ராஹீம்(அலை) மக்காவிற்காக பிரார்த்தனை செய்தது போல், நான் மதீனாவிற்கு அதனுடைய ஸாவு, (என்ற அளவையிலும்) முத்து (என்ற அளவையிலும் அபிவிருத்தி செய்யுமாறு) பிரார்த்தனை செய்துள்ளேன்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு ஸைத்(ரலி), நூல்: புகாரி

இப்ராஹீம்(அலை) செய்த பிரார்த்தனையை திருக்குர்ஆனில் அல்லாஹ் சொல்லிக் காட்டுகிறான். *"இறைவா! இவ்வூரைப் பாதுகாப்பு மையமாக ஆக்குவாயாக! இவ்வூராரில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பியோருக்குக் கனிகளை வழங்குவாயாக!" (அல்குர்ஆன் 2:126)*

அல்லாஹ் அவருடைய பிரார்த்தனையை ஏற்று மக்காவைப் பாதுகாப்பு மையமாக ஆக்கினான்.

திருக்குர்ஆன் அபயபூமி என அறிவித்து 14 நூற்றாண்டுகளைக் கடந்த பின்பும், எத்தனையோ ஆட்சி மாற்றங்கள் நடந்த பின்பும் அது இன்றளவும் அபயபூமியாகவே உள்ளது. 14 நூற்றாண்டுகளாக எந்தத் தாக்குதலுக்கும் உள்ளாகாத வரலாற்று சிறப்பு மிக்க ஆலயமாகவும் இது இருந்து வருகிறது. குர்ஆன் இறைவனின் வார்த்தைகள் தான் என்பதற்கு இது மிகப் பெரும் சான்றாக அமைந்துள்ளது.

மேலும் உலகத்தில் விளைகின்ற அனைத்து கனி வர்க்கங்களும் மக்காவில் தாராளமாக வந்து குவிந்து கொண்டிருப்பதும், இது இறைவனின் வார்த்தைகள் என்பதற்குச் சான்றாகத் திகழ்கிறது.

**அல்லாஹ்வுடைய பாதுகாப்பு:**

'கஃபா' ஆலயத்திற்கு அல்லாஹ் தன்னுடைய நேரடிப் பாதுகாப்பை வழங்கியுள்ளான். கியாமத் நாள் வரை அதை எந்தப் படையாலும் அழித்து விட முடியாது. பின்வரும் வரலாற்றுச் சம்பவம் அதற்குச் சிறந்த சான்றாகும்.

அப்ரஹா எனும் மன்னன் தன்னுடைய யானைப் படையுடன் கஃபாவைத் தகர்ப்பதற்காக வந்தான். அவனை எதிர்த்துப் போராடக் கூடிய எந்தப் படையும் அப்போது மக்காவில் இல்லை. என்றாலும், அல்லாஹ் ஒரு வகையான பறவைகளை அனுப்பி, அந்த யானைப் படையை அழித்து தன்னுடைய ஆலயத்தைப் பாதுகாத்தான்.

**கஃபா ஆலயத்தைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:**

*"(முஹம்மதே!) யானைப் படையை உமது இறைவன் எப்படி ஆக்கினான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவர்களின் சூழ்ச்சியை அவன் தோல்வியில் முடிக்கவில்லையா? அவர்களிடம் பறவைகளைக் கூட்டம், கூட்டமாக அனுப்பினான். சூடேற்றப்பட்ட கற்களை அவர்கள் மீது அவை வீசின. உடனே அவர்களை மெல்லப்பட்ட வைக்கோல் போல் ஆக்கினான். (அல்குர்ஆன் 105:1-5)*

மேலும் கியாமத் நாள் நெருங்கும் போது ஒரு படை 'கஃபா'வை இடிப்பதற்காகப் படையெடுத்து வருவார்கள். அல்லாஹ் அவர்களையும் அழித்து கஃபாவைப் பாதுகாப்பான் என்ற செய்தியை பின்வரும் நபிமொழி மூலம் அறிந்து கொள்ளலாம்.

"ஒரு படையினர் கஃபாவின் மீது படையெடுப்பார்கள். வெட்ட வெளியான ஒரு பூமியில் அவர்கள் இருக்கும் போது அவர்களில் முதலாமவர் முதல் கடைசி நபர் வரை உயிருடன் பூமிக்குள் புதையுண்டு போவார்கள்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! அவர்களில் முதலாம் நபர் முதல் கடைசி நபர் வரை எவ்வாறு புதையுண்டு போவார்கள்? அங்கு அவர்களைச் சேராதவர்களும் இருப்பார்கள். கடைவீதிகளும் இருக்குமே!" எனக் கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "முதலாமவர் முதல் கடைசி நபர் வரை புதையுண்டு போகத் தான் செய்வார்கள். எனினும் அதற்குப் பிறகு அவரவரது எண்ணத்திற்கேற்ப எழுப்பப் படுவார்கள்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) நூல்: புகாரி

இறைவன் 'கஃபா' ஆலயத்திற்கு தன்னுடைய நேரடிப் பாதுகாப்பை வழங்கியிருப்பது அதனுடைய சிறப்பைக் காட்டுகிறது.

*இன்ஷாஅல்லாஹ் தொடரும்...*

# செல்போனின் தரத்தை அறிவது எப்படி?

*- அபூ ரம்லா*

காலையில் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்தது முதல் இரவு தூங்கப்போகும் வரை உபயோகப் படுத்தக்கூடிய பொருட்கள் எல்லாமே தரமானதாக இருக்க வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் விரும்புவோம். அப்படி அன்றாடம் உபயோகிக்கக்கூடிய பொருள்களில் செல்போன் அதிமுக்கியமான பொருளாக மாறியுள்ள கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குடும்பத்திற்கு ஒன்று என்றிருந்த நிலை மாறிப்போய் தனி நபரெரருவர், ஒன்றிற்கு மேல் செல்போன்களை பயன்படுத்துகின்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

செல்போன்களை அதிகமான நேரம் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் அதிகளவில் இருக்கிறது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது, இன்ஷா அல்லாஹ் பாதிப்புகள் குறித்து பிறகு வரக்கூடிய பதிப்புகள் மூலம் தெரிந்து கொள்வோம்.

இந்த செய்தியின் மூலம் நாம் வாங்கியிருக்கின்ற அல்லது வாங்கப்போகின்ற செல்போன்களின் தரம் என்ன என்பதை தெரிந்துக் கொள்வோம். அதாவது நாம் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்களின் தரம் உயர்ந்த அல்லது குறைவான அல்லது போலியான பொருட்கள் மார்க்கெட்டில் வலம் வந்து கொண்டிருக்கின்ற சூழலில் செல்போனின் தரத்தை எதனை அடிப்படையாக கொண்டு நிர்ணயிப்பது பற்றி அறிவோம்.

உங்களுடைய செல்போனில் *#06# என்று அழுத்திய உடன் நீங்கள் பயன்படுத்தக் கூடிய செல்போனில் அடையாள நம்பர் 15 இலக்கங்களில் தெரியவரும். அப்படி கிடைக்கக்கூடிய எண்களில் 7 மற்றும் 8வதாக வரக்கூடிய எண்களை கீழ்கண்ட பட்டியலோடு ஒப்பிட்டு பார்த்து உங்களின் செல்போனின் தரத்தை அறிந்து கொள்ளுங்கள்.

7 மற்றும் 8வது எண் 00 என்றிருந்தால் தரமான தொழிற்சாலையில் தயாரித்தது என்பது மட்டுமல்ல உங்களின் செல்போனும் மிக மிக தரம் உயர்ந்தது என்பதை குறிக்கும். (மிக மிக நன்று)

7 மற்றும் 8வது எண் 01 அல்லது 10 என்றிருந்தால் தயாரித்த நாட்டின் பெயர் பின்லாந்து மற்றும் தரமான பொருள் என்பதை குறிக்கும். (மிக நன்று)

7 மற்றும் 8வது எண் 08 அல்லது 80 என்றிருந்தால் தயாரித்த நாட்டின் பெயர் ஜெர்மனி மற்றும் தரம் தாழ்ந்தது அல்ல என்பதை குறிக்கும். (நன்று)

7 மற்றும் 8வது எண் 02 அல்லது 20 என்றிருந்தால் ஒருங்கிணைப்பு செய்தது துபாயில். தரமான பொருள் அல்ல என்பதை குறிக்கும். (சுமார்)

7 மற்றும் 8வது எண் 13 என்றிருந்தால் ஒருங்கிணைப்பு செய்தது அஜேர்பயிஜான்;. தரம் குறைந்த பொருள் மற்றும் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கூடியதுமாகும். (மோசம்)

மேற்சொன்ன செய்திகள் அனைத்தும் எதிர்வரும் காலங்களில் தரமான பொருள்களை தேர்ந்தெடுக்க உதவியாக இருக்கும் என்பதற்காகவே இந்த தகவல்களை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

# லப் டப் தொடர்-5

## Heart Attack

- தொகுப்பு: அபூ ஆஸியா

### மையோகார்டியல் இன்ஃபார்க்ஷன் (Myocardial Infarction) என்றால் என்ன?

'மையோ' (Myo) என்றால் சதை (muscle) 'கார்டியல்' (cardial) என்றால் இதயத்தைக் குறிக்கும்; 'இன்ஃபார்க்ஷன்' (Infarction) என்பது ரத்த ஓட்டம் இல்லாமல் இறந்த திசு எனப் பொருள்.

எல்லா திசுக்களைப் போலவே, இதயமும் திசுக்களால் மட்டுமே ஆன ஒரு உறுப்பு. அதற்கும் மற்ற உறுப்புகளைப் போலவே, தொடர்ந்த ரத்த ஓட்டம் மூலம் சத்துப் பொருள்களும், ஆக்ஸிஜனும் தேவைப்படுகிறது. இவை கரோனரி நாளங்கள் (Coronary arteries) மூலமே நிகழ்கின்றன.

இதில் ஏதேனும் அடைப்பு (Block). தடை (obstruction). குறுகல் (narrowing). இறுகல் (Hardening). ரத்தக்கட்டி (blood clot) எவையேனும் நிகழும் போது அதற்கு கரோனரி நாள நோய் எனப் பெயர்.

மேற்சொன்ன எல்லாமும் ரத்தஓட்டத்தை தடைப்படுத்தி, இதயத்திசுக்களின் சில பாகங்களை மரிக்கச் செய்கிறது. இப்போது அந்தப் பகுதி, மற்ற திசுக்களோடு இழைந்து இயங்க முடியாமல் போகிறது. ஒரு வலி மூலம் இது உணரப்படுகிறது. இதற்கு ஆஞ்சைனா (Angina) எனப் பெயர்.

ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கரோனரி நாளங்களில் இது போல 'அடைப்பு' ஏற்படுகையில் மாரடைப்பு (Heart attack) நிகழ்கிறது!

### எப்படி நிகழ்கிறது?

கொழுப்புச்சத்து ரத்த நாளங்களின் உள்ளே அதிகமாகும் போது, நாளங்களின் உட்சுவற்றில் சிறிய காயம் ஏற்படுகிறது

இதை ஆற்றுவதற்கென நாளச்சுவர்கள் (Vessel Walls) ஒரு விதமான ரசாயனப் பொருட்களை (chemicals) சுரக்கின்றன

இதனால், சீரான ரத்த ஓட்டம் தடைப்பட்டு, சற்று தேக்கம் (slowing) ஏற்படுகிறது

இப்போது, ரத்தத்தில் மிதக்கும் புரதம், கால்சியம், மற்றும் இன்னும் சில கழிவுப் பொருட்கள் இந்த நாளச்சுவர்களில் ஒட்டிக் கொள்கின்றன

இவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து, உருண்டு, திரண்டு ஒரு துகள் (Plaque) என ஆகிறது.

நாளாக, நாளாக, இந்த துகள்கள் பல்வேறு அளவுகளில் உருவாகி ரத்தநாளங்களுக்குள் சும்மா அங்குமிங்குமாய் ஓடிக்கொண்டிருக்கின்றன.

உள்ளே சாதுவாகவும் (soft) வெளியே திடமாகவும் (Hard) இருக்கும் இந்தத் துகள்கள் (plaques) எப்போதாவது உடையும் போது, இந்த மென்பொருள் (soft fatty inside) வெளியே வர, உடனே ப்ளேட்லெட்டுகள் (platelets) இதனை அடைக்க வர, ரத்தக்கட்டி (blood clot) உருவாகுகிறது.

இப்படி உருவான ரத்தக்கட்டி, ஏதேனும் ஒரு சிறிய ரத்தக்குழாயில் சென்று அடைத்துக் கொள்ளும் போது, அந்தக் குழாயில், நாளத்தில், அடைப்பு ஏற்பட்டு, அடைப்புக்குக் கீழே செல்லும் நாளத்தில், இரத்தம் செல்வது தடைப்படுகிறது. பிராணவாயு கிடைக்காமல் வெகு விரைவில், இந்தப் பகுதி உணர்விழக்கிறது (starved). இது மூன்று வித விளைவுகளை நிகழ்த்தலாம்.

1. இது உடனடியாக ரத்த ஓட்டத்தின் வேகத்தின் மூலமாகவே அகற்றப் படுகையில், இது தானாகவே சரி செய்யப்பட்டு சகஜ நிலை மீண்டும் திரும்புகிறது.
2. அகற்றப்படாமலும், உடையாமலும், அடைப்பு அங்கேயே பெரிய அளவில் நிற்கையில், மாரடைப்பு (Heart Attack) நிகழ்கிறது.
3. இதன் மூலம் இந்த ரத்தக்குழாய் அடைப்பு தாங்காமல் உடைபட்டு, இதய நிறுத்தம் (Cardiac arrest) நிகழும்.

### அறிகுறிகள் (Symtoms) என்னென்ன?

1. நெஞ்சுவலி, ஒரு விதமான இனம் புரியாத வலி அல்லது வேதனை, மார்பின் நடுப்பகுதியில் இருந்து கிளம்பி, நெஞ்சமுத்தம் (pressure). பாரம் (heaviness). இறுக்கம் (tightness). வலி (pain). எரிச்சல் (burning). மரமரப்பு (numbness) அல்லது பிசைதல் (Squeezing) போன்ற உணர்வு ஒரு சில நிமிடங்களுக்கு இருந்து, பின்னர் மறையும் அல்லது மீண்டும் வரும். அஜீரணம் அல்லது நெஞ்செரிச்சல் என தவறாகக் கருதி அசட்டையாக இருந்து விடுவார்கள் பல நேரம்.
2. இந்த வலி உடலின் பல பாகங்களிலும் உணரப்படும். குறிப்பாக கைகள், இடது தோள்பட்டை, முதுகு, கழுத்து, தாடை, அல்லது வயிறு போன்ற பாகங்கள் இந்த வலியால் உணரப்பட்டு ஒரு அசௌகரியத்தைக் கொடுக்கும்.
3. மூச்சுத் திணறல், மேல்மூச்சு வாங்குதல்.
4. உடல் வியர்த்துக் கொட்டும், சற்று குளிரும்.
5. வயிறு உப்புதல், அஜீரண ஏப்பம், தொண்டை அடைப்பு போன்ற உணர்வு.
6. வாந்தி வருவது போன்ற உணர்வு, வாந்தி.
7. தலை சுற்றல், மயக்கம் வருதல்.
8. உடம்பு தளர்ச்சி, ஒரு படபடப்பு, இதயத் துடிப்பு அதிகமாதல், சீரில்லாமல் துடித்தல்.
9. தூக்கம் வருதல் போன்ற ஒரு உணர்வு.

இது எல்லாமே ஒருவருக்கு நிகழும் எனச் சொல்ல முடியாது. தாக்குதலின் வீரியத்தைப் பொறுத்து இதில் ஒரு சிலவோ, அல்லது அனைத்துமோ எற்படலாம்.

இவை எதுவுமே நிகழாமல் கூட இந்த தாக்குதல் நிகழும். பெரும்பாலும், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கே இது நிகழும் வாய்ப்பு அதிகம்.

அப்படியே நிகழ்ந்து, இது சரியாகவும் போயிருக்க, வழக்கமாக மருத்துவரைச் சந்திக்கும் போது, அவரால் கண்டுபிடிக்கப்படும் ஒரு ஈ.ஸி.ஜி. (E.C.G) மூலம். 'உங்களுக்கு சமீபத்தில் மாரடைப்பு நிகழ்ந்திருக்கிறது' என அவர் சொல்ல நோயாளிக்கே ஆச்சரியமாகக்

கூட இருக்கும் வாய்ப்பு இருக்கிறது.

முதல் முறையாக இதில் ஏதேனும் அறிகுறிகள் தெரிந்தால், முன் சொன்னது போல ஏதோ ஆஜீரணக் கோளாறு என அலட்சியமாக இருந்து விடாதீர்கள். சற்று படுத்து எழுந்தால் சரியாகிவிடும் என நீங்களே முடிவு செய்து விடாதீர்கள். உடனே ஒரு அருகில் உள்ள மருத்துவரை சென்று பாருங்கள்.

அவர் உங்களைப் பரிசோதித்து, தேவையான சோதனைகளைச் செய்து முறையான மருத்துவ சிகிச்சையைச் செய்வார் அல்லது அவசர உதவி செய்து உங்களை ஒரு தேர்ந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்.

உங்களுக்கு இது முன்னரே ஒரு சில முறைகள் நடந்து, அதற்கான சிகிச்சை அளித்திருந்து, அடுத்த முறை வலி வரும் போது சாப்பிட என நைட்ரோக்ளிசரின் (Nitroglycerine) மாத்திரையோ அல்லது ஸ்ப்ரேயோ (Spray) உங்களிடம் இருப்பின், உடனே அதை உபயோகிக்க வேண்டும். அருகில் ஒரு நிழலான இடத்தில் அப்படியே அமருங்கள்.

பிறகு அவசர உதவிக்கான எண்ணிற்கு தொலைபேசி மூலம் பேசி அவர்களை வரவழைக்க வேண்டும். இது சரியாகிவிடும், எனக்கு ஒன்றுமில்லை' என்று நினைத்து அப்படியே இருந்துவிடவேண்டாம். ஏனெனில், இதயத் தாக்குதல் நிகழ்ந்த அடுத்த ஒரு மணி நேரம் மிகவும் முக்கியமானது. பெரும்பாலான தாக்குதல்கள் இந்த ஒரு மணி நேரத்திற்குள் கவனிக்கப்பட்டால், சரியாகும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஒரு அட்டாக் நடந்ததும், ஆக்ஸிஜன் கிடைக்காததால், இதயத்தின் திசுக்கள் பாதிப்பு நடந்த இடத்தைச் சுற்றி செயலிழக்கத் துவங்குகிறது. நேரமாக, நேரமாக இந்த இடஅளவு பெரிதாகும் அபாயம் இருக்கிறது. எனவே தான், உடனே மருத்துவ உதவிக்கு போக வேண்டியதன் முக்கியத்துவம் மேலும் அதிகமாகிறது.

### சிகிச்சைக்குச் செல்ல தாமதம் ஆவதற்காண காரணங்கள்

'எனக்கு என்ன வயதாகிவிட்டது, 28 வயசு தானே ஆகுது. எனக்கு இந்த மாரடைப்பெல்லாம் வராது!'

'இந்த அறிகுறி, வலி என்னன்னு தெரியலை, வெறும் அஜீரணமாயிருக்கும். கத்திரிக்காய் கறில கொஞ்சம் எண்ணை அதிகம் இன்னிக்கு!'

'இது ஒண்ணும் அப்பிடி வலி அதிகமா தெரியலை! மோர் கரைச்சுக் கொடு! சரியாயிரும்!'

'ஏதோ லேசா முணுக் முணுக்குன்னு நெஞ்சு வலிக்குது, என்னவாயிருக்கும்?' 'கத்தாதீங்க, கத்திப் பேசாதீங்கன்னு எத்தினி வாட்டி சொன்னாலும் ஒங்களுக்கு புத்தி வராது. கொஞ்சம் தண்ணி குடிங்க. சரியாப் போயிடும்! காலைல போய் டாக்டரைப் பார்க்கலாம்'

'காலைலேர்ந்தே வயித்தை என்னமோ பண்ணிகிட்டு இருக்கு. இந்த அஜீரணம் என்னிக்குத்தான் என்னை விட்டுப் போகுமோ தெரியலை.'

'என்ன இந்த மூட்டு வலி இன்னிக்கு கொஞ்சம் ஜாஸ்தியாவே படுத்துதே. அந்த மூட்டுவலி மாத்திரையைக் கொண்டா! அதை சாப்பிட்டு படுத்தா சரியாயிடும்'

'இன்னிக்கு என்னமோ நெஞ்சு வலி ஜாஸ்தியா இருக்கு. சரியாப் போயிடும்னு நினைக்கிறேன். மகன்தான் என்ன பண்ணுவான் பாவம்! அவன் ஒருத்தன் சம்பளத்துலதான் எங்க எல்லாரையும் பார்த்துக்கறான். இப்ப இதை வேற சொன்னா டாக்டர் செலவுதான் கூடுதலாகும். இந்த பணம் இருந்தா நாளைக்கு பேரன் ஸ்கூல் ஃபீஸ் கட்ட உதவும். கொஞ்சம் நேரம் தூங்கி எழுந்தால் எல்லாம் சரியாயிடும்.'

இப்படிப் பல்வேறு காரணங்களால், இந்த மாரடைப்பு (Heart Attack) புறக்கணிக்கப்படும் அபாயம் நிகழலாம். ஆனால், இவையே உங்கள் உயிருக்கு உலை வைக்கக்கூடிய சாத்தியம் உண்டு!

இன்ஷாஅல்லாஹ் தொடரும்


அல்ஹம்துலில்லாஹ்

"சுவனப்பாதை" மாத இதழ் தற்போது இணையத்தில்!!!

www.suvanam.com

"சுவனப்பாதை" முந்தைய பதிப்புகள் PDF கோப்புகளாக பதிவிறக்கம் செய்து படித்துப் பயன்பெறுங்கள்.


# அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகள் (பாகம் 13)

## கடலுக்கடியிலும் மின்மினிப்பூச்சியினம்

*(ஆங்கில மூலம்: ஹாரூன் யஹ்யா) தமிழில் : அபூ இஸாரா*

நாம் முந்தைய அத்தியாயத்தில் அறிந்து கொண்டது போல் கடலுக்கடியிலும் மின்மினிபூச்சிகளைப் போன்று வெளிச்சம் தரும் உயிரினங்கள் வாழ்கின்றன. பொதுவாக கடலுக்கடியில் வாழும் இந்த மின்மினிபூச்சிகள் தங்களது எதிரிகளை பயமுறுத்தவும், குழப்பமடையச் செய்யவும் அவைகளின் உடலிலிருந்து உருவாகும் இந்த வெளிச்சத்தை பயன்படுத்துகின்றன. இந்த இனத்தைச் சார்ந்த அநேகமான உயிரினங்கள் தங்களது உடலின் பின்பகுதியில் தையல் விளிம்புகளைப் போன்றுள்ள சிறிய சிறிய அலகுகளைக் கொண்டு வெளிச்சத்தை உருவாக்குகின்றன. இப்போது நாம் இங்கு இந்த உயிரினங்களுக்கிடையே உள்ள பொதுவான தனிச்சிறப்புக்களைப் பற்றி ஆய்வு செய்வோம்.

இந்த இனத்தைச் சார்ந்த ஓர் உயிரினம் பார்ப்பதற்கு கடல்வாழ் உயிரினமான ஜெல்லி மீனைப் (Jelly-Fish) போன்றிருக்கும். இந்த இனம் சாதாரண கண்களால் பார்க்கமுடியாத மிகச்சிறிய கடல்வாழ்

உயிரினங்களையும், தாவரங்களையும் உணவாக உட்கொள்கிறது. இந்த வகை உயிரினங்கள் தங்களது உணவைப்பிடிக்க ஒட்டும் தன்மைகொண்ட மிக மெல்லிய நூலிலை போன்ற தும்பிகளை பயன்படுத்துகிறது. மற்றொரு இனத்தைச் சார்ந்த இந்த வகை உயிரினங்கள் தங்களது வாயை மிகப்பெரிதாக பிளந்து வைத்துக்கொண்டு, தங்களது வாயில் நுழையும் பல உயிரினங்களை ஒரே நேரத்தில் உணவாக உட்கொள்கின்றன. இந்தவகை கடல்வாழ் உயிரினம் தனது உடலில் நெருக்கமாக அமைந்துள்ள மெல்லிய மயிரிழைகளை பயன்படுத்தி தண்ணீரில் நீந்திச் செல்கிறது.



பொதுவாக வெளிச்சத்தை உண்டாக்கும் இந்தவகை கடல்வாழ் உயிரினங்கள் வழக்கத்திற்கு மாற்றமான தோற்றத்தைக் கொண்டுள்ளன. இந்த வகை உயிரினங்களில் சிகப்பு நிற உயிரினம் தனது எதிரிகளிடமிருந்து ஆபத்து ஏற்படும் வேளைகளில் தனது உடலிலிருந்து வெளிச்சத்துடன் கூடிய ஒரு பகுதியை பிரித்து எறிகிறது. இதனால் குழப்பத்திற்குள்ளாகும் தனது எதிரியிடமிருந்து, தப்பித்துக் கொள்வதற்காக இந்த முறையை பயன்படுத்துகின்றன இந்த இனத்தைச் சார்ந்த கடல்வாழ் உயிரினங்கள்.

கடல்வாழ் உயிரினங்களான நட்சத்திரமீன்கள், முள்மீன்கள் மற்றும் இறக்கை மீன்கள் போன்றவை தங்களது உடலில் கூரிய முள்போன்ற அமைப்பைக் கொண்டுள்ளன. இந்த கூரிய முட்களை அவைகள் தங்களது பாதுகாப்பு கவசமாக பயன்படுத்துகின்றன. இந்த இனத்தைச் சார்ந்த கடல்வாழ் உயிரினங்கள் கடற்கரை ஓரங்களிலும், கடற்பரப்பிலும், கடலில் உள்ள பவளப்பாறைகளிலும் காணப்படுகின்றன. இந்த வகை கடல்வாழ் உயிரினங்களும் தங்களது எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தங்களது உடலிலிருந்து வெளிச்சத்தை உண்டாக்குகின்றன. அவைகள் தாக்கப்படும்போது, கைகள் மூலமோ அல்லது தங்களது உடலில் உள்ள கூரிய முட்களிலோ அவைகள் ஒளிவெள்ளத்தை உருவாக்கி, தங்களது எதிரிகளை நிலைகுலையச் செய்கின்றன.



இந்த கடல்வாழ் உயிரினங்கள் உருவாக்கும் வெளிச்சத்தின் மூலம் கிடைக்கக்கூடிய மிகவும் சுவராஸ்யமான சிறப்பம்சம் என்னவென்றால் - இந்த வெளிச்சத்தைக் கொண்டு அவைகள் மற்ற உயிரினங்களை ஏமாறச் செய்வதுதான். இந்த செயலுக்கு நட்சத்திர மீன்களின் நடவடிக்கையை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த நட்சத்திர மீனினம் கடலில் ஆயிரம் மீட்டர் ஆழத்தில் அதாவது 3,280 அடி ஆழத்தில் உயிர்வாழ்கிறது. இந்த மீனினம் தனது கைகளின் முனைகளில் பச்சை மற்றும் நீலம் கலந்த பிரகாசமான வெளிச்சத்தை உருவாக்குகிறது. இந்த வெளிச்சம் நட்சத்திரமீன்களை உணவாக உட்கொள்ளும் உயிரினங்களுக்கு, நட்சத்திர மீன்கள் சுவையானதாக இருக்காது என்கிற உணர்வை ஏற்படுத்துகிறது. இன்னொரு வகை நட்சத்திர மீன் தனது எதிரி மீன்கள் தன்னை தாக்கும்போது, எரிந்து கொண்டிருக்கும் வெளிச்சத்துடன் கூடிய தனது கைகளில் ஒன்றை தனது உடலிலிருந்து கழற்றி வீசுகிறது. அதன் பின்னும் வெண்மையான நிறத்தில் எரிந்து கொண்டிருக்கும் வெளிச்சத்தினால் அதன் எதிரிகள் குழம்பிப்போகின்றன. எதிரிகள் குழம்பிப்போயிருக்கும் இந்த வேலையை பயன்படுத்தி, நட்சத்திர மீன்கள் உயிர் தப்பிவிடுகின்றன.

நாம் இதுவரை ஆய்வுசெய்தபடி கடல்நீரில் வாழும் உயிரினங்களுக்கு அல்லாஹ் வழங்கிய உடலமைப்பிலிருந்து வெளிச்சத்தை உருவாக்கும் என்கிற சில உதாரணங்கள் அல்லாஹ்வின் படைப்பில் உள்ள அதியற்புதத்தை நமக்கு வெளிச்சமிட்டு காட்டுகின்றன. மனிதர்களின் உடல் நீரைக் கொண்டு படைக்கப்பட்டதைப் போல, தண்ணீரிலேயே வாழும் இந்த உயிரினங்களும் நீரைக் கொண்டுதான் படைக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் மனிதன் சிந்திப்பது போல் சிந்திக்கும் ஆற்றல் இந்த படைப்பினங்களிடம் இல்லை. ஆயினும் மனிதர்களாகிய நாம் மலைத்து நின்று, அவைகளை உற்று நோக்கும் அளவிற்கு இந்த படைப்பினங்கள் பல சிறப்பியல்புகளை கொண்டுள்ளன.

கடல்வாழ் உயிரினங்கள் கொண்டிருக்கும் இந்த சிறப்பியல்புகள், அல்லாஹ் ஈடு இணையற்ற படைப்புகளை படைப்பதில் வல்லவன் என்பதை நமக்கெல்லாம் அறிவிக்கின்றன. இங்கு குறிப்பிடப்பட்ட இந்த உதாரணங்கள் யாவும், யாவற்றையும் படைக்கும் ஆற்றல் பெற்ற அல்லாஹ்வைத் தவிர, வணக்கத்திற்குரியவன் அல்லது வணக்கத்திற்குரியது எவரும் இல்லைஃ அல்லது எதுவும் இல்லை என்பதை நாம் முழுமையாக புரிந்து கொள்ளச் செய்கின்றன. எவர்கள் இவற்றை முற்றிலும் அறிந்து நடந்து கொள்கிறார்களோ, அவர்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் வலிமையை முற்றிலும் புரிந்து கொள்ள முயற்சிப்பவர்கள் என்பதோடு, அல்லாஹ்வின் உவப்பை பெற நாடுபவர்களும் ஆவார்கள்.

அல்லாஹ்விற்கு இணைவைப்பவர்கள், அல்லாஹ்வால் முற்றிலும் கைவிடப்பட்டவர்கள் என்பதை அல்லாஹ் அருள்மறை குர்ஆனில் சுட்டிக்காட்டுவதை இவ்வேளையில் நினைவு கூறுவது பொருத்தமானதாகும்:

படைப்பாளன் அல்லாஹ், அருள்மறை குர்ஆனிலே கூறுகிறான்:

அல்லாஹ்வுடன் மற்றோர் கடவுளை நீர் (இணை) ஆக்க வேண்டாம், (அப்படிச் செய்தால்) நீர் பழிக்கப்பட்டவராகவும், உதவி அற்றவராகவும் அமைந்து விடுவீர். (அல்குர்ஆன் 17:22)

☆ ☆ ☆

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 4:2

## போட்டிக்குரிய கேள்விகள்

1. ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகளால் ஆனது. அதில் மிகச் சிறந்தது எது?

2. ஈமானின் அடையாளம் அன்சாரிகளை நேசிப்பதாகும். நயவஞ்சகத்தின் அடையாளம் -------- வெறுப்பதாகும்.

3. எந்த வணக்கத்தை பேணுவதின் மூலம் முழுநிலவை காண்பது போல அல்லாஹ்வை மறுமையில் பார்க்கலாம்?

4. முஃமீன்களில் அழகிய குணமுடையவரே அவர்களில் ஈமானில் பரிபூரணமானவர் ஆவார். உங்களில் சிறந்தவர் உங்கள் ---------------- சிறந்தவரே ஆவார்.

5. செஸ் விளையாட்டில் இரண்டாவது முறையாக உலக சாம்பியன் பட்டம் பெற்ற இந்திய வீரர் யார்?

6. அழித்தொழிக்கும் ஏழு பெரும்பாவங்களில் மூன்றினை குறிப்பிடவும்.

7. (இறைவனைத் தவிர வேறு) ஒருவரை நான் உற்ற நண்பராக ஆக்கிக் கொள்ள விரும்பியிருந்தால் இவர்களையே ஆக்கிக் கொண்டிருப்பேன் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் யாரை குறிப்பிட்டார்கள்.

8. நபி(ஸல்) அவர்கள் ஒட்டுமுடி வைத்து விடுபவளையும், ஒட்டுமுடி வைத்துக்கொள்பவளையும் பச்சை குத்திவிடுபவளையும் ----------- சபித்தார்கள்.

9. அன்பினை 100 பங்கிட்ட அல்லாஹ் எத்தனை பங்கினை இவ்வுலகில் இறக்கினான்?

10. நானும், அநாதையின் காப்பாளரும் சொர்க்கத்தில் இப்படி இருப்போம் என்று நபி(ஸல்) எந்த இரண்டு விரல்களை கொண்டு சைகை செய்தார்கள்.

11. நபி(ஸல்) அவர்களுடைய உம்மத்தாகிய நமக்கு கூறிய இயற்கை மரபுகள் எத்தனை?

12. நபி(ஸல்) அவர்கள் செய்த ஹஜ்ஜின் வகை யாது?

13. நபி(ஸல்) அவர்கள் எந்த ஹிஜ்ரி ஆண்டில் ஹஜ் செய்தார்கள்.

14. ஹஜ் செய்யக்கூடியவர், ஹஜ்ஜுடைய நாட்களில் வியாபாரம் செய்ய மார்க்கம் அனுமதியளித்துள்ளதா? இல்லையா?

15. ஒரு முஸ்லிமுக்கு எத்தனை தடவை ஹஜ் கடமையாகும்?

16. ஹஜ் செய்யக்கூடியவர் எந்த நாளில் இஹ்ராமை களைய வேண்டும்?

17. துல்ஹஜ் பிறை 11 மற்றும் 12 அன்று எந்தெந்த ஜம்ராக்களுக்கு கல்லெறிய வேண்டும்.

18. ஹஜ்ஜுடைய நாட்களில் அய்யாமுத் தஷ்ரீக் என்பது எந்த நாட்களை குறிக்கும்?

19. அரபா நாளில் யாருக்கு நோன்பு நோற்பது சுன்னத்தாகும்?

20. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜின் கூலி என்ன?

**அறிவுப் போட்டி - 3:12 க்கான பரிசு பெறுபவர் : உம்மு அஹ்மத்**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

## விதிமுறைகள்

1. இப்போட்டியில் கலந்து கொள்ள அனைத்து கேள்விகளுக்கும் விடை தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.
2. கொடுக்கப்பட்டுள்ள 20 கேள்விகளுக்கு அதிக பட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
4. விடைகளை தனித்தாளில் கேள்வி எண் மற்றும் அதற்குரிய பதிலை தெளிவாக எழுத வேண்டும்.
5. விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்

   *K.L.M. Ibrahim (Madani). Tamil Division,*

   *P.O. Box: 32628, Jeddah 21438*

   அல்லது suvanam@gmail.com என்கிற முகவரிக்கு பிரதி மாதம் பிறை 29-அல்லது 30ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.
6. நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.
7. பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.
8. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 3:12 க்கான விடைகள்

1. ரமலான்
2. முஹம்மது(ஸல்) அவர்களின் சமுதாயம்
3. கஸ்தூரி
4. அன்ஸாரிப் பெண்கள்
5. கிஸ்ராவின் மகளை
6. ரய்யான்
7. மலக்குகள்
8. நரக நெருப்பிலிருந்து விடுதலை
9. ருகைய்யா(ரலி) அவர்கள்
10. அல்லாஹும்ம இன்னக்க அஃப்வுன் துஹிப்புல் அஃப்வ ஃபாஉஃபு அன்னீ
11. கடைசி பத்தில்
12. பொறுமை இழந்து, தடுத்து
13. இல்லை
14. பிஸ்மிக்க அல்லாஹும்ம அமுத்து வ அஹ்யா
15. திரும்ப நோற்க வேண்டும்
16. தண்ணீர்
17. சகோதரன்
18. a. வெண்(குஷ்டம்) தோல் நோயுடையவர், b. வழுக்கைத் தலையுடையவர், c. குருடர்)
19. பிஸ்மில்லாஹி தவக்கல்த்து அலல்லாஹ் லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்
20. a. ஸலாமுக்கு பதில் உரைப்பது. b. நோயாளியை உடல்நலம் விசாரிப்பது. c. ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்வது.